9 ஆம் வகுப்பு - தமிழ் மூன்றாம் பருவம்

குறுவினா, சிறுவினா விடையுடன்

குறுவினாக்கள் :

1) கருக்கொண்ட பச்சைப் பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது ?

கருக்கொண்ட பச்சைப் பாம்பு நெற்பயிர்கள் தோற்றத்திற்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

2) கொற்கை நகரில் முத்துக்களைப் போல் உள்ள பொருள்களாகக் காட்டப்படுவன எவை?

சங்குகள் மணலில் ஈனுகின்ற முட்டைகள்,

தரையில் உதிர்ந்துகிடக்கும் புன்னை மொட்டுகள்,

பாக்குமரத்தின் பாளையிலிருந்து சிந்தும் மணிகள் ஆகியன முத்துக்கள் போலிருந்தன.

3) தமிழரின் சமூக வாழ்க்கை எத்தகு சிறப்புடையதாகத் திகழ்கிறது ?

தமிழரின் சமூக வாழ்க்கை, தாமும் வாழ்ந்து, தம்மைச் சுற்றியிருக்கும் அனைவரையும் வாழவைக்கும் சிறப்புடையது.

4) அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ- இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?

அள்ளல் - சேறு

பழனம் - வயல்.

5) நீங்கள் வாழும் நிலப் பகுதியின் திணை யாது ?

மருதம், வயலும் வயல் சார்ந்த இடமும், தலைவன் தலைவிக்கிடையே ஏற்படும் சிறுப்பிணக்காகிய ஊடல் மருதம்.

6) புறத்திணையிலுள்ள ஏழு பிரிவுகள் யாவை ?

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்.

7) பகுத்தறிவு என்றால் என்ன ?

எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி, அறிவின்வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும்.

8) தாவோ தே ஜிங் இன்னொரு பக்கம் என்று எதைக் குறிப்பிடுகின்றார் ?

பார்வையில் படும் உருப்பொருள் உண்மை எனினும் உருவம் இல்லாத வெற்றிடமே நமக்குப் பயன் உடையதாகிறது. அது நம் வாழ்வைச் சிறப்படையச் செய்யும்.

9) கமுகுமரம் எதைத் தேடியது ?

விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் தேடியது.

10) யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார் ?

யசோதரன்

11) யசோதர காவியம் - குறிப்பு வரைக.

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று.

வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப்பெற்றது.

ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.

ஐந்து சருக்கங்களைக் கொண்டது.

12) அசை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

அசை இரண்டு வகைப்படும்.

1) நேரசை. 2) நிரையசை.

13) ஈரசைச் சீர்களுக்குரிய வேறு பெயர்கள் யாவை ?

இயற்சீர், ஆசிரிய உரிச்சீர்.

14) அடி என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

இரண்டும் இரண்டிற்கும் மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து வருவது அடி எனப்படும். அவை ஐந்து வகைப்படும்.

15) தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையச் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

தமிழ்ச் சான்றோன் சமுதாயத்திலேயே வாழ்ந்து தன்னால் இயன்றவரை சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்வான்.

உரோமையச் சான்றோன் என்பவன் சமுதாயத்திலிருந்து விலகி, தன் சொந்தப் பண்புகளையே வளர்ப்பனாக இருப்பான்.

16) பிடிபசி களைஇய பெருங்கை வேழம்- இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.

பிடிபசி - ஆறாம் வேற்றுமைத் தொகை.

களைஇய - சொல்லிசை அளபெடை.

பெருங்கை - பண்புத் தொகை.

17) குறுந்தொகை - பெயர்க்காரணம் எழுதுக.

குறுகிய அடிகளைக்கொண்ட பாடல்களின் தொகுப்பாதலின் குறுந்தொகை எனப்பட்டது. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

18) குறுந்தொகைப் பாடல்களின் மூலம் நாம் அறிவன யாவை ?

குறுந்தொகை பாடல்கள் பல இயற்கைக் காட்சிகள் மூலம் அன்பின் வளத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

19) பின்வருநிலையணி என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும்?

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லி பொருளோ மீண்டும் பல இடத்தும் வருதலே பின்வருநிலை அணி ஆகும். இது மூன்று வகைப்படும்.

20) அணிகளில் இன்றியமையாத அணி எது ? ஏன் ?

அணிகளில் இன்றியமையாதது உவமையணி ஆகும். ஏனெனில் மற்ற அணிகள் உவமையிலிருந்து கிளைத்தவையாகவே உள்ளன.

சிறுவினாக்கள் :

1) பழந்தமிழர், உலக மக்களை உறவினராய் எண்ணி வாழ்ந்தனர் - தொடர் உணர்த்தும் கருத்தை எழுதுக.

யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் சங்கப் பாடல் உலகோரை உறவினராக்கியது. பழந்தமிழர் உலக உயிர்கள் அனைத்தையும் தழுவி நிற்கும் உயர்ந்த பண்புடன் திகழ்ந்தனர். இயற்கை அறிவில் சிறந்திருந்தனர். உலக மக்கள் அனைவரையும் உறவினராய் ஏற்று வாழ்ந்தனர்.

2) தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

தன் + குறிப்பு + ஏற்றம். இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

3) புறப்பொருள் அமைந்த சங்க இலக்கிய நூல்களை அறிந்தெழுதுக.

புறநானூறு, பதிற்றுப்பத்து
பரிபாடல், மதுரைக் காஞ்சி
மலைபடுகடாம்.

4) சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.

சேறுபட்ட வயல்களில் அரக்கு நிற செவ்வாம்பல்கள் மலர்ந்தன. அதைக் கண்ட நீர்ப்பறவைகள் தண்ணீரில் தீப்பிடித்ததாக அஞ்சி தன் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் வைத்துக் கொண்டன.- இது சேர நாட்டின் வளம்.

உழவர்கள் நெற்போர் மீதேறி நின்று மற்ற உழவர்களை அழைப்பர். இது வீரர்கள் போர்களத்தில் கொல்யானை மீது ஏறி நின்று மற்ற வீரர்களை அழைப்பது போலிருந்தது.

சங்கின் முட்டைகள், புன்னை மொட்டுகள், யாவும் முத்துக்கள் போலிருந்தன. பாண்டிய நாடு முத்து வளம் மிக்கது.

5) ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார் ?

ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் ஆயிரம் வகை உணவுகள் கிடைக்கின்றன.
உணவளிக்கும் அறச்சாலைகள் ஆயிரம் உள்ளன.
மகளிர் ஒப்பனை செய்யும் மணிமாடங்கள் ஆயிரம்.
தொழில்செய்யும் கம்மியர்கள் ஆயிரம்பேர் உள்ளனர்.

6) சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

அனைவரும் சிக்கனத்தைக் கடைபிடிப்பது கட்டாயம் என்றார் பெரியார். இன்றைய காலகட்டத்தில் சிக்கனமாக வாழ்ந்தால் மட்டுமே வாழ்வு சிறக்கும். இன்று குடும்பத்தில் இருபாலரும் உழைத்து சிக்கனமாக செலவு செய்து வாழ்ந்துவருகின்றனர். தண்ணீர் முதல் தங்கம் வரை அனைத்திலும் சிக்கனம் வலியுறுத்தப்படுகிறது.

7) நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை ?

ஒரு செயலைச் செய்வதென்றால் அது பயனுள்ளதாக இருத்தல் வேண்டும்.
தீய பண்புகளை நீக்க வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.
மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்.
நன்னெறியைப் போற்றிக் காக்க வேண்டும்.

8) பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.

கம்பராமாயணம், யசோதர காவியம்
மனோன்மணியம், இரகுவம்சம்
மகாபாரதம்.

9) யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு எழுதுக.

அறத்தான் வருவது மட்டுமே இன்பம் தரும் என்கிறார் வள்ளுவர். வாழ்க்கைக்கு அறத்தை விட நன்மை தருவது வேறு இல்லை.

வெகுளாமை எனும் அதிகாரத்தின் வழியே சினத்தை நீக்க வேண்டும் என்கிறார். எவரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதனை மறந்து விடவேண்டும். நாம் போற்றிக் காக்க வேண்டியது பொறை.

10) உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துகளாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை ?

உலகமேதை ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும்போது, திருக்குறளில் உள்ளது போல உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது என்பார்.

11) கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.

1. மனிதன் தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும். தனது ஆளுமையை விரிவடையச் செய்து செழுமைப்படுத்த வேண்டும்.
2. ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும்.
3. வாழ்க்கைக்கு ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

12) பழங்களை விடவும் நசுங்கிப் போனது - இடம்சுட்டி விளக்குக.

இடம் : கல்யாண்ஜி எழுதிய, அக்கறை எனும் கவிதையில் இடம்பெற்றுள்ளது.

பொருள் : மிதிவண்டி கூடையில் இருந்த தாக்காளிகள் வழியில் சிதறி நாலாப் பக்கமும் ஓடின. அதனை வழியில் செல்வோர் பொருட்படுத்தவில்லை. அதனைக் கண்ட கவிஞர் நசுங்கியது பழங்கள் அல்ல அடுத்தவர்கள் மீதான அக்கறை என்கிறார்.

13) யா மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.

பெண் யானையின் பசியைப் போக்க, பெரிய கைகளை உடைய ஆண் யானை, மெல்லிய கிளைகளை உடைய யா மரத்தின் பட்டையை உரித்துத் தன் அன்பை வெளிப்படுத்தும். இக்காட்சியானது தலைவனுக்குத் தலைவியை நினைவுப்படுத்தும்.

14) உருவக அணியை விளக்குக.

கவிஞன், தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி, அதற்கு உவமையாகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக்கூறும் இத்தன்மையே உருவகம். உவமை, உவமேயம் எனும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி.

எ-கா,   இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

இப்பாடலில், இன்சொல் - நிலமாகவும், வன்சொல் - களையாகவும், வாய்மை - எருவாகவும், அன்பு - நீராகவும், அறம் - கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

தயாரிப்பு : எஸ்.ஜெயசெல்வன்
பட்டதாரி ஆசிரியர்
தி.ஆ.மே.பள்ளி, திருவிடைமருதூர்
செல் : 9443740120.